# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (செப்டம்பர்/ஒக்டோபர் 2020)

## PSS 3143 மோதல் : எண்ணக்கருக்கள் மற்றும் கோட்பாட்டு அபிவிருத்தி
## Conflict : Concepts and Theoretical Development

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

---

### பகுதி – I

01. (i) மோதல் என்ற பதத்திலிருந்து நீர் யாது விளங்குகின்றீர் (10 புள்ளிகள்)

(ii) மோதல் என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் உட்பொருளை விபரித்து எழுதுக. (10 புள்ளிகள்)

02. (i) மோதல் மூலம் ஏற்படும் இருபக்க விளைவுகளைத் தெளிவாக எழுதுக. (10 புள்ளிகள்)

(ii) மோதலைக் குணாம்சங்களின் அடிப்படையில் வகைப்படுத்தித் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

03. (i) சமாதானம் மூலம் ஏற்படும் இருபக்க விளைவுகளைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) சமாதானம் தொடர்பாக ஜோகான் கல்துங் கூறும் கருத்துக்களை விளக்குக. (10 புள்ளிகள்)

### பகுதி – II

04. "மோதல் நிலைமாற்றத்தின் நோக்கம் மோதல் இயல்புகளில் மாற்றத்தினை ஏற்படுத்துவதாகும்." இக்கருத்தினை உமக்கு நன்கு பரீட்சையமான மோதல் ஒன்றுடன் தொடர்புபடுத்திப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

05. "மோதல் விசைப்பண்பு (Dynamic) கொண்டது." இக்கருததினை ஜோகான் கல்துங்கின் மோதல் முக்கோணி பற்றி உமக்கு இருக்கும் அறிவினைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

06. "மத்தியஸ்த்தம் என்ற செயல்முறை விசைப்பண்புடைய, கட்டமைக்கப்பட்ட இடையூடாட்டச் செயல்முறையாகும்." இக்கருத்தினை உமக்கு நன்கு பரீட்சையமான மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தச் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்திப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

07. "ஒரு மனிதன் சக மனிதனை அல்லது அவனது சொத்துக்களை நேரடியாகத் தாக்குவதன்மூலம் சேதம் விளைவிக்கும் அல்லது அழிக்கும் நடத்தை வன்முறையாகும்." இக்கருத்தினை ஜோகான் கல்துங்கின் வன்முறை முக்கோணி பற்றி உமக்கு இருக்கும் அறிவினைப் பயன்படுத்தி விமர்சனம் செய்க.